சாட்சிய வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)
முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்
அமர்வு வழக்கு எண்.64/2024

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–5வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நல்லரசன் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | தனிக்கொடி | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

**முதல் விசாரணை:** –

1. நான் பள்ளிபாளையம் அண்ணாநகரில் குடியிருந்து வருகிறேன். நான் ஈரோடு சத்தி பிரிவு ரோட்டில் உள்ள பரணி லாட்ஜில் பணிபுரிந்து வந்தேன். 07.05.2023ம் தேதி அன்று காலை 11.45 மணிஅளவில் மாதவகிருஷ்ணா வீதியில் உள்ள பரணி லாட்ஜில் எனது உரிமையாளரை பார்க்க சென்றேன். அப்போது போலீஸ்சார் போதை பொருள் தொடர்பாக விசாரித்து கொண்டு இருந்தார்கள் மேலும் என் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் போலீஸ்சார் தயார் செய்தார்கள். என்னுடன் விஜயகுமார் என்பவர் இருந்தார்.

2. என்னிடம் தற்போது காட்டப்படும் பார்வை மகஜாரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அது அ.த.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையில் பெறப்பட்டது. மேலும் தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.த.சா 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.மேலும் கைபற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான்.

3. என் முன் காட்டப்படும் சிரஞ்சி மூலம் போடும் ஊசி 80, அது அ.த.சா.பொ.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 6 சிரஞ்சிகள் அது அ.த.சா.பொ.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்றும் Topcynta 100 mg கொண்ட 80 மாத்திரைகள் அது அ.த.சா.பொ.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைபற்றுதல் மகஜர் அ.த.சா 3ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் என் முன்பு ரூ.1,30,000/– பணத்தை

கைபற்றினார்கள். அது தற்போது என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ளது அ.த.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரி ஊசி மற்றும் போதை மாத்திரை பயன்படுத்தினேன் என்று என் முன்னிலையில் சொன்னார். போலீஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. நான் பரணி லாட்ஜில் மேனேஜராக இருந்தேன் என்றால் சத்தி ரோடு பரணி லாட்ஜில் மேனஜராக பணிபுரிந்தேன். வாரம் ஒரு முறை சம்மந்தப்பட்ட காவல் நிலையம் பரணி லாட்ஜில் பதிவேடுகளில் பார்த்து அறைகளை சோதனை செய்து பதிவேடுகளில் கையெழுத்து செய்வார்கள். எனக்கும், என் உரிமையாளர் மற்றும் போலீஸ்சாருக்கு அறிமுகம் உண்டு. மாதவகிருஷ்ணா வீதியில் அமைந்துள்ள பரணி லாட்ஜ்க்கு நான் காலை செல்லும் பொழுது சுமார் 11.30 மணியிலிருந்து 11.45 மணி இருக்கும். மேற்கண்ட லாட்ஜின் நுழைவு வாயில் மற்றும் லாட்ஜி உள்புறம் சிசிடிவி கேமரா பொறுத்தப்பட்டு இருந்தது. நான் போகும் போது போலீஸ்சார் விசாரித்து கொண்டு இருந்தார்கள்.

2. மேற்கண்ட லாட்ஜியை சுற்றி கடைகள் உள்ளது என்றால் சரிதான். மேலும் மக்கள் நடமாட்டம் மிகுந்து அன்றை தினம் காணப்பட்டது என்றால் சரிதான். பார்வை மகஜர் காவல் ஆய்வாளர் தயார் செய்தார். பார்வை மகஜரில் என்ன விவரம் எழுதி உள்ளது என்ற விவரம் தெரியாது ஆனால் அதில் நான் கையொப்பமிட்டேன். எனது பரணி லாட்ஜ் உரிமையளார் சொன்னதின் பெயரில்தான் பூர்த்தி செய்யப்படதா படிவம் மற்றும் வெள்ளைதாள்களில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றேன் என்றால் சரியல்ல.

3. நான் சொன்ன தேதியில், சொன்ன இடமான மாதவகிருஷ்ணா வீதியில் அமைந்துள்ள பரணி லாட்ஜிர்க்கு செல்லவில்லை என்றாலும் 1ம் ஆஜர் எதிரியை நான் அங்கு பார்க்கவில்லை என்றால் சரியல்ல. போலீஸ்சார் இன்று 1ம் எதிரியை அடையாளம்காட்டியபிறகு தான் 1ம் எதிரியை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சான்று பொருட்கள் அனைத்தும் இன்று தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன்என்றால் சரியல்ல.

4. ஆஜர் 1ம் எதிரி எந்த விதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சான்று பொருட்கள் அனைத்தும் எதுவும் அவரிடம் இருந்து கைபற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல்துறைக்கு கையிருப்பு சாட்சி என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்க்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**